(6 pages) **Reg. No. :** ......................................

**Code No. : 5135** **Sub. Code : PTLM 12/ ZTLM 12**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2021

First Semester

தமிழ் — Core

இலக்கணம் I — தொல்காப்பியம் - எழுத்து

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொல்காப்பியத்திற்கு முதல் நூலாக அமைந்த நூல் எது?

   (அ) வீரசோழியம் (ஆ) நன்னூல்

   (இ) அகத்தியம் (ஈ) செயிற்றியம்

2. "மெய்யின் இயற்கை —————— நிலையல்"

   (அ) புள்ளியோடு (ஆ) எழுத்தோடு

   (இ) அகரத்தோடு(ஈ) சகரத்தோடு

3. “அத்தின் அகரம் —————— இல்லை”

(அ) அகர முனை (ஆ) இகர முனையற்றே

(இ) மகர முனையற்றே (ஈ) வகர முனை

4. “ணளவென் புள்ளி முன் —————— தோன்றும்”

(அ) டணவெனத் (ஆ) தன வெனத்

(இ) றனவெனத் (ஈ) லளவெனத்

5. ‘ஞந’ என் புள்ளிக்கு —————— சாரியை

(அ) ஒன்னே (ஆ) அத்தே

(இ) இன்னே (ஈ) அற்றே

6. தாய் —————— என்றும் சொல் எவ்வாறு புணரும்?

(அ) இயற்கையாகும்

(ஆ) மெல்லெழுத்து பெறும்

(இ) செயற்கையாகும்

(ஈ) வல்லெழுத்துமிகும்

7. மரப்பெயர் கிளவி பெற்றுவரும் சாரியை என்ன?

(அ) அற்றே (ஆ) இன்னே

(இ) அம்மே (ஈ) இற்றே

8. “எட்டன் ஒற்றே —————— ஆகும்”

(அ) ணகாரம் (ஆ) னகாரம்

(இ) மகாரம் (ஈ) பகாரம்

9. "குறியதன் முன்னர் ஆயுதப்புள்ளி உயிருடன் புணர்ந்த"

(அ) வல்லாற்றான் மிசைந்தே

(ஆ) மெல்லாற்றான் மிசைந்தே

(இ) இடையாற்றான் மிசைந்தே

(ஈ) உயிர்மெய் மிசைந்தே

10. நன்னூல் எழுத்ததிகாரத்தில் மூன்றாவது இயல் என்ன?

(அ) உருபு புணரியல்

(ஆ) மெய்யீற்றுப் புணரியல்

(இ) எழுத்தியல்

(ஈ) உயிரீற்றுப் புணரியல்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) எழுத்துக்களின் பொதுப்பிறப்பு முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்யெழுத்துகளின் பிறப்பு முறையை விளக்குக.

12. (அ) மூவகை திரிபுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முகத்லளவை, நிறுத்தலளவை எண்ணலளவைப் பெயர்கள் தமக்குள் புணரும் முறையினை எழுதுக.

13. (அ) தாம், நாம், யாம் ஆகிய சொற்களின் புணர்ச்சியில் பெறும் மாற்றங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) "எல்லாம்" என்னும் விரவுப்பெயர்ப் புணர்ச்சி விதிகளைக் கூறுக.

14. (அ) தொண்ணூறு, தொள்ளாயிரம் புணர்ச்சி விதிகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) திசைப் பெயர் முன் திசைப்பெயர்கள் புணரும் முறையை விளக்குக.

15. (அ) சாரியைக் குறித்து தொல்காப்பியர், நன்னூலார் வேறுபடும் இடங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) புணர்ச்சி குறித்து தொல்காப்பியம்-நன்னூல் கருத்தை ஆராய்க.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை எழுதுக.

16. (அ) மெய்மயக்கம் குறித்த கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் கூறும் நூன்மரபு கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

17. (அ) புணரியல் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) "ஐகார வேற்றுமை திரிபென மொழிப"-இக்கூற்றினை ஆய்க.

18. (அ) உயிர் மயங்கியலின் அமைப்பு முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) புள்ளி மயங்கியலின் அமைப்பு முறையை விளக்குக.

19. (அ) குற்றியலுகரப் புணரியலில் இடம்பெற்றுள்ள புறனமைச் செய்திகளை விவரி.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்துக.

20. (அ) சார்பெழுத்துகள் குறித்துத் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறும் கருத்துக்களை ஒப்பீட்டளவில் ஆய்க.

(அல்லது)

(ஆ) 'ஆய்தம்' குறித்து தொல்காப்பியம், நன்னூலார் கருத்துகளை விளக்குக.